# றிவாம்பின் (ஆர்.எம்.பி.)
# Rifampin (RMP)

## Tamil




**காசநோயாளர் மருந்து உட்கொள்ளல் வழிகாட்டி**

**றிவாம்பின் (ஆர்.எம்.பி.) என்பது என்ன?**

றிவாம்பின் (ஆர்.எம்.பி.) என்பது நோய்க்கிருமிகளை ஒழிக்கும் ஒரு மருந்து. இது இரு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது:

1. காசநோயைக் குணப்படுத்துவதற்கு (வேறு மருந்துகளுடன் உட்கொள்ளப்படுவது)
2. சில சந்தர்ப்பங்களில் இயக்கமற்ற (ஒடுங்கியிருக்கும்) காசநோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு

காசநோய்க் கிருமிகள் மிகவும் வலுவானவை. அவற்றை ஒழிப்பது கடினம். காசநோய்க் கிருமிகளைக் கொன்று, காசநோயைக் குணப்படுத்துவதற்கு இந்த மருந்தை நீங்கள் 6 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை உட்கொள்ள வேண்டியிருக்கும். இந்த மருந்தை நீங்கள் திட்டவட்டமாக எத்தனை மாதங்கள் உட்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் மருத்துவரே தீர்மானிப்பார்.

**நான் இந்த மருந்தை எப்படி உட்கொள்ள வேண்டும்?**

- நீங்கள் இந்த மருந்தை ஒவ்வொரு நாளும் **அல்லது** உங்கள் மருத்துவர் அறிவுறுத்தியவாறு உட்கொள்வது மிகவும் முக்கியம்.
- **நீங்கள் மருந்து உட்கொள்வதை நிறுத்தினால், அதனை உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.**
- நீங்கள் ஒரு தடவை மருந்து உட்கொள்ளத் தவறினால், கூடிய சீக்கிரம் அதனை மீண்டும் உட்கொள்ளவும். ஆனால் ஒரே தடவையில் இரு தடவைகளுக்குரிய மருந்தை உட்கொள்ளலாகாது.
- இந்த மருந்தை வெறுவயிற்றில் உட்கொள்ள முயலவும். அதனால் வயிற்றுக் குழப்பம் ஏற்பட்டால், உணவுக்குப் பின்னர் உட்கொள்ளவும்.
- (ஆர்.எம்.பி.) மருந்தை ஓர் உலர்ந்த குளிர்மையான இடத்தில் வைத்தெடுக்கவும்.

இந்த மருந்தை உட்கொள்ளும் காலத்தில் மதுபானம் **அருந்த வேண்டாம்.** அருந்தினால் உங்கள் ஈரல் பாதிக்கப்படக்கூடும்.

- நீங்கள் உட்கொள்ளும் அல்லது உட்கொள்ளப் போகும் வேறு மருந்துகள் பற்றி உங்கள் மருத்துவரிடம் தவறாது தெரிவிக்கவும்.
- இந்த மருந்தை உட்கொள்ளும் காலத்தில் கருத்தடை மாத்திரைகள் பலனளிக்காது **போகக்கூடும்.**
- நீங்கள் கர்ப்பிணியாக அல்லது பாலூட்டும் தாயாக இருந்தால் இந்த மருந்தை உட்கொள்வதற்கு முன்னர் உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசிக்கவும்.
- இந்த மருந்தை உட்கொள்ளும் காலத்தில் மென்-ஒட்டு-வில்லைகளைக் (cotact lens) கண்களில் அணிய வேண்டாம்.

**நான் எத்தகைய பக்க விளைவுகள் சிலவற்றைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?**

- (ஆர்.எம்.பி.) மருந்து உட்கொள்ளும் காலத்தில் அநேகருக்குப் பிரச்சனைகள் ஏற்படுவதில்லை.
- நீங்கள் (ஆர்.எம்.பி.) மருந்தை உட்கொள்ளும் காலத்தில் உங்கள் மருத்துவர் உங்களைக் ஒழுங்காகக் கண்காணிக்க வேண்டியிருக்கும்.
- **பின்வரும் பக்க விளைவுகள் சில ஏற்படுவது வழக்கம்:**
  - வயிற்றுக் குழப்பம்/பசி இன்மை
  - இளமஞ்சள்நிற அல்லது செந்நிற உமிழ்நீர், கண்ணீர், சிறுநீர், மலம் (பாதிப்பற்ற விளைவுகள்).
  - தோல் வியாதிகள், அரிப்பு
  - காய்ச்சல் போன்ற அறிகுறிகள் (காய்ச்சல், விறைப்பு, கிறுதி, மூச்சடைப்பு

  **பின்வருபவை இன்னும் கடுமையான பக்க விளைவுகள். அவற்றுள் எது தோன்றினாலும் மருந்து உட்கொள்வதை நிறுத்தி, உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும்:**
  - சோர்வு/மிகுந்த களைப்பு
  - குமட்டல்/வாந்தி
  - வயிற்று வலி
  - பசி இன்மை
  - தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாதல்
  - சிறுநீர் மிகவும் கடுநிறமாதல்
  - மூன்று நாட்களுக்கு அல்லது இன்னும் அதிக நாட்களுக்கு காய்ச்சல் காய்தல்

**காசநோய் மருந்து உட்கொள்வது பற்றிய குறிப்புகள்**

- ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் உங்கள் மருந்தை உட்கொள்ளவும். எடுத்துக்காட்டாக:
  - படுப்பதற்கு முன்னர்
  - காலையில் எழுந்தவுடன்
- வாராந்த மாத்திரைக் கலம் ஒன்றைப் பயன்படுத்தவும்
- நீங்கள் மாத்திரை உட்கொள்ளும் ஒவ்வொரு நாளையும் ஒரு நாட்காட்டியில் குறியிடவும்.
- உங்களுக்கு நினைவூட்டும்படி உங்கள் குடும்பத்தவர் அல்லது நண்பர் ஒருவரிடம் சொல்லி வைக்கவும்.
- நேரடிக் கவனிப்புச் சிகிச்சையைக் கருத்தில் கொள்ளவும்.

உங்கள் மருந்துகள் அல்லது காசநோய் பற்றி நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும். அல்லது ரொறன்ரோ பொது சுகாதாரத் துறையுடன் தொடர்புகொள்ளவும்: **416-338-7600**.

மின்னஞ்சல்: **targettb@toronto.ca**
இணையத் தளம்: **www.toronto.ca/health/tb_prevention**

TORONTO Public Health



September 2011
PH1109SS212RTam